## மலேசியத் தமிழ்த் திரைப்படங்களில் கல்வியியல் சிந்தனைகள்

## Educational Issues in Malaysian Tamil Movies


பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran [1]

முனைவர் க.சில்லாழி / Dr K.Silllalee [2]

முனைவர் இரவிந்திரன் மாரையா / Dr.Ravindaran Maraya[3]



**Abstract**

A movie is a collaborative effort among the producer, director, actors, supporting actors, music directors, lyricists, cinematographers, and many parties. Initially, movies were viewed as a source of entertainment sans any fundamental values, especially in education. However, nowadays, movies have penetrated every stratum of the world population and significantly impacted people. Besides entertainment, movies also project the audience's feelings, thoughts and lifestyles that can initiate many changes in many sectors; such importance deems movies as an essential component of human life. When audiences watch the movies, they identify their lives with the stories portrayed in the movies, which are generally produced to resemble people sociologically; this elevates the value of movies from being a source of entertainment to something more vital. Besides social issues, education-related issues are frequently raised in movies too, and Malaysian Tamil movies are not an exception. Thus, this paper aims to investigate the portrayal of education-related matters in Malaysian Tamil movies



Date of submission: 2022-08-10
Date of acceptance: 2022-09-20
Date of Publication: 2022-12-28


Corresponding author's Name:
Dr K.Silllalee
Email: silllalee@um.edu.my



**Keywords**: Malaysian Tamil Movies, Education, Sociology, Education, School Dropouts


**முன்னுரை**

19-ஆம் நூற்றாண்டு துவங்கி இன்றுவரை கலைத்துறையில் மிகச்சிறந்த முதன்மை ஊடகமாக விளங்குவது திரைப்படத்துறை எனில் அது மிகையில்லை. மேற்கத்திய


[1] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@um.edu.my

[2] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my

[3] [2]The corresponding author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. ravindaranm@um.edu.my

நாடுகளில் (பிரான்ஸ் நாட்டில் முதல் திரைப்படம் தயாரிக்கப்பட்டது) தோன்றிய திரைப்படத்துறை இன்று உலக நாடுகள் பலவற்றிலும் பரவி வளர்ந்துள்ளது. இத்துறை தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் மெல்ல மெல்ல நுழைந்து தனக்கென ஒரு முக்கியமான இடத்தினைப் பெற்று இன்று மக்களின் வாழ்க்கையில் முக்கியதொரு மனமகிழ்ச் சாதனமாக விளங்கி வருகின்றது (Silllalee, 2015). ஏறத்தாள, அரை நூற்றாண்டிலிருந்து மனிதச் சமூகத்தினது வளர்ச்சிக்குத் திரைப்படம் எனும் கலை முக்கியப் பங்கினை வழங்கியுள்ளது. இன்று, திரைப்படம் என்பது மக்களின் வாழ்வில் ஓர் அங்கமாகவே விளங்குகின்றது(Dananjayan Kovinth, 2014).

தற்போதைய நவீன உலகில் திரைப்படங்கள் அற்ற வாழ்க்கையைக் கற்பனைச் செய்துப் பார்ப்பதே கடினம் எனும் அளவிற்கு மனிதச் சமுதாயத்தின் வாழ்க்கையில் திரைப்படத்துறை ஒன்றினைந்து விட்டது (Bordwell & Thompson, 2008). திரைப்படங்களானது வெறுமென மனமகிழ்ச் சாதனமாக மட்டும் அல்லாமல், பார்வையாளர்களின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல ஆற்றலைப் பெற்றிருப்பதனால், இவை மனிதனின் வாழ்க்கையில் ஒரு அங்கமாகவேப் பார்க்கப்படுகின்றது (Silllalee, 2015).

இத்தகைய திரைப்படமானது மக்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பதோடு அதில் மாற்றம் வரவும் காரணமாகின்றது. இதற்குக் காரணம் மக்கள் திரைக்காட்சிகளை உண்மை என்ற உணர்வுடன் பார்ப்பதுவேயாகும். அதனால்தான் இன்றளவும் திரைப்படச் சிந்தனைகள் மக்கள் மனதில் தவறான கருத்துகளைப் புகுத்தி விடக்க்கூடாது என்பதற்காக இவை தனிக்கை வாரியத்தால் தனிக்கை செய்யப்பட்டுப் பின்னர் மக்கள் மத்தியில் திரையிடப்படுகின்றன.

இத்தகைய ஆளுமை மிக்கத் திரைப்படத்துறையில் சமூகவியல் கூறுகள் குறித்த சிந்தனைகளும் அதன் தாக்கமும் மிகுதியாகவே உள்ளது. அதிலும் ஒரு நாட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களாவன அந்த நாட்டில் வாழும் மக்கள் அல்லது சமூகத்தின் வாழ்க்கையைக் காட்டுவதாகவும் அவர்களிடையே நிலவும் பிரச்சனைகளை வெளிக்காட்டுவதாகவும் விளங்குகின்றன. இச்சிந்தனையின் அடிப்படையில் தற்போதைய ஆய்வானது மலேசியத் திரைப்படங்களில் முன்வைக்கப்படும் சமூகக் காட்சிகளில் கல்வி குறித்த சிந்தைகளை முன்வைக்கும் பாங்கினையும் அதில் உள்ள சிக்கல்களையும் ஆய்வு செய்வதாகவே ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திரைப்படம்**

திரைப்படம் என்பது ஒரு கூட்டுக்கலையாகும் (எல்லீஸ், 2016). தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர்கள், துணைநடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், ஒளிப்பதிவாளர்கள் எனப் பல்வேறுத் தரப்பினரின் கூட்டு முயற்சியினால் உருவாகுவதேத் திரைப்படம். கருப்பொருள், கதைப்போக்கு, பாடல்கள், வசனங்கள், காட்சிகள், ஒளிப்பதிவு, ஒலி, படத்தொகுப்பு, மற்றும் நெறியாளர் ஆற்றல் ஆகியவை ஒரு திரைப்படத்தின் முக்கியமான ஒன்பது உட்கூறுகளாகும் (சுரேஷ் பால், 2016).

தொடக்கத்தில் திரைப்படங்கள் மனமகிழ்ச் சாதனங்களாகவேப் பார்க்கப்பட்டன. கல்வியியல் நிலையில் கல்வியாளர்கள் மத்தியில் திரைப்பட ஊடகம் பெரியதொரு ஆய்வியல் சான்றாக கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சிறுகதை, நாவல், கவிதை போன்ற இலக்கியங்கள் கூறும் ஆழ்ந்த சிந்தனைப் பதிவுகளை வெளிப்படுத்தும் சாதனாமாகவும் இவை நோக்கப்படவில்லை; சமூக மறுமலர்ச்சி ஊடகமாகவும் பார்க்கப்படவில்லை (Richard & Robert, 2009). ஆனால் 1930களில் வெளிவந்த *A Million and the One Night* (1926), *The Film Till Now* (1930), *History of The American Film Industry* (1931) மற்றும் *The Rise of The American Film* ஆகிய புத்தகங்களின் வெளியிட்டிற்குப் பிறகுதான் திரைப்படத்துறையைக் கல்வியியல் நோக்கில் அணுக ஆய்வாளர்களுக்கு ஒரு முகாந்திரத்தை அளித்தது (Silllalee, 2015).

இன்று சமூகத்தில் திரைப்படமானது முக்கியத்துவம் பெற்ற ஊடகமாக விளங்குகிறது. அதிலும் இது மிகப் பெரிய வர்த்தகக் கேந்திரமாகவும் உருவெடுத்துள்ளது.

**ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரைப்படங்கள்**

தற்போதைய ஆய்வு மலேசியத் தமிழ் திரைப்பட இயக்குனர் விமலா பெருமாளின் ஆக்கத்தில் வெளிவந்துள்ள திரைப்படங்களை மட்டுமே ஆய்வு செய்கிறது. இயக்குனர் விமலா பெருமாள் இளம் இயக்குனர் மட்டுமல்லாது மலேசியத் தமிழர்களின் சமகாலச் வாழ்க்கையையும், சிந்தனைகளையும், சிக்கல்களையும் தனது திரைப்படங்களில் முக்கியக் கருப்பொருளாக கைத்துத் தயாரிக்கும் போக்குடையவர். இதுவே இரவது திரைப்படங்கள் தற்போதைய ஆய்வுக் கட்டுரைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மைக் காரணமாகும். தற்போதைய ஆய்வில் இவர் தயாரித்த விளையாட்டுப்

பசங்க, வெட்டிப் பசங்க, வெடிகுண்டுப் பசங்க ஆகிய மூன்று திரைப்படங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**கல்விச் சிந்தனை**

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" *(குறள் 400)*

எனும் தெய்வப் புலவரின் வாக்குக்கு ஒப்ப உலகில் மனிதனுக்குச் சிறந்த செல்வம் என்பது கல்விதான். கல்வி ஒரு மனிதனின் வாழ்வாதாரம் என்றும் அவன் வாழ்வின் முன்னேற்றத்திற்கான மூலதனம் என்றும் கூறுவர். தமிழர் வாழ்க்கையில் சங்க காலம் தொட்டு இன்றுவரை கல்விச் செல்வமே அழியாத செல்வமாகப் போற்றப்பட்டுள்ளது. ஔவையும் கூட 'கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே' என பிச்சை எடுத்தாலும் கூட கல்வி கற்பதை விட்டுவிடக் கூடாது என்று ஒவ்வொரு மனிகனுக்கும் கல்வியினது முக்கியத்துவத்தைப் பாடுகிறார். கல்வி ஒருவரின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள உதவும் கருவியாகும்.

மலேசியத் தமிழ்ச் சமூகத்தைப் பொருத்தவரையில் கல்வியானது மிக அடிப்படையான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. கல்வி கற்றால் நல்ல வாழ்க்கையை வாழலாம், அதன் மூலம் சமுதாயத்தில் நன்மதிப்பும் உயர்ச்சியும் கிடைக்கும், பல்வேறு துறைகளில் வெற்றியை ஈட்டலாம் போன்ற சிந்தனைகள் கல்வியை முன்னிருத்தியே இவர்களிடத்தில் ஆழப் பதிந்துள்ளது. ஆனாலும் கூட கல்வியில் நாட்டமின்மை, பள்ளிக்கூடத்தில் இருந்து இடைநிற்றல், போன்ற பிரச்சனைகள் இவர்களிடத்தில் இல்லாமல் இல்லை. இத்தகைய பிரச்சனைகளை மலேசியத் திரைப்படங்கள் முன்வைக்கத் தவரவில்லை.

**கல்லாமை**

அடிப்படையில் கல்லாமை என்பது முக்கியதொருச் சமுதாயச் சிக்கலாகவே விளங்கி வருகின்றது. கல்வியறிவு இல்லாதவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாக சமூகவியலாளர்கள் கருதுகிறார்கள். உடல்நலப் பாதிப்பு, குறுகிய ஆயுட்காலம், வேலையின்மை, சுரண்டல் மற்றும் பாலின சமத்துவமின்மை கல்வியின்மையால் ஏற்படுகின்ற விளைவுகளாகப் பார்க்கப்படுகின்றன (Chris, 2021)

மேலும் கல்லாமை எனும் சமுதாயச் சிக்கல் பிற சிக்கல்கள் ஏற்படுவற்கு காரணமாக அமைவதால் இது சமுதாயச் சிக்கலாகப் பார்க்கப்படுகின்றது. வேலையின்மை, குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்றச் சிக்கல்கள் ஏற்பட அடிப்படைக் காரணியாக அமைவது கல்லாமையே (Ioana Marin, 2020).

மலேசியத் தமிழ்த் திரைப்படங்களில் கிடைக்கபெற்றத் தரவுகளின் அடிப்படையில் தற்போதைய ஆய்வில் கல்வியில் அக்கரையின்மை மற்றும் பள்ளி இடைநிற்றல் ஆகிய இரண்டு சிக்கல்களும் விவாதப்பொருளாகின்றன.

கல்வியில் அக்கரையின்மை என்பது கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி அறியாதச் சூழலைக் குறிக்கின்றது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கருவியாய் விளங்கும் கல்வியைப் பெற வாய்ப்புக் கிடைத்தும் அதன் முக்கியத்துவத்தை உணராது இருக்கும் இளைஞர்களின் அவலத்தை எடுத்துரைக்கிறது (Abdhul Ghani, 2014). பள்ளி இடைநிற்றல் என்பது ஒரு குறைந்தபட்ச நற்சான்றிதழைக் கூடப் பெறாமல் பள்ளியை விட்டு நீங்குதல் எனப்படுகின்றது. மேலும், சமூகவியலாளர்களின் பார்வையில் பள்ளி இடைநிற்றல் என்பது வளர்ந்து வரும் நாடுகளில் ஏற்படும் முக்கியமானதொரு சமுதாயச் சிக்கலாகப் பார்க்கப்படுகின்றது (Joseph, 2018).

**மலேசியத் தமிழ் திரைப்படங்களில் கல்வியில் அக்கரையின்மைத் திரைகாட்சிகள்**

*விளையாட்டுப் பசங்கத்* திரைப்படத்தில் குமார் கதாப்பாத்திரம் மூன்று ஆண்டுகள் கல்லூரி தேர்வில் தோல்வி அடைந்து வந்துள்ளதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். ஒரு காட்சியில் குமாருக்கும் அவன் காதலிக்கும் இடையே நிகழும் வாக்குவாதத்தில் இச்சிக்கலைப் பார்க்க முடிகின்றது.

*வெட்டிப் பசங்க* திரைப்படத்தில் டெனீஸ் கதாப்பாத்திரம் வாழ்க்கையில் கல்வி இல்லாமலே பணம் சம்பாதிக்க விரும்பும் கதாப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. ஒரு காட்சியில் அவன் தந்தை "டிப்லோமாவை கூட முடிக்காத உனக்கு எவ்வாறு நல்ல வேலைக் கிடைக்கும்" என்று கூறும் காட்சியின் வழி டெனீஸ் கதாப்பாத்திரம் கல்வியின்பால் அக்கரை இல்லாதவனாக இருப்பதைப் பார்க்க முடிகின்றது. மற்றொருக் காட்சியில் போலி இளங்கலைச் சான்றிதழோடு ஒரு நிறுவனத்திற்கு நேர்முகத் தேர்விற்குச் செல்லும் டெனீஸ் நேர்முகத் தேர்வில் எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்க முடியாத நிலையில் அவமானத்தை அடைவதாகக் காட்டப்படுகிறது.

**மலேசியத் தமிழ் திரைப்படங்களில் கல்வியில் அக்கரையின்மை - பகுப்பாய்வு**

அடிப்படையில் மாணவர்கள் கல்வியில் அக்கரைச் செலுத்தாதச் சூழல் ஏற்படும் பொழுது தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுதல், பள்ளி இடைநிற்றல்

பள்ளிக்குத் தொடர்ச்சியாகச் செல்லாமல் இருத்தல் போன்ற சிக்கல் ஏற்படுவதுண்டு. தகுந்த கல்வி அடைவு பெறாதக் காரணத்தினால் சமுதாயத்தில் வேலையில்லாச் சிக்கலை இது போன்ற மாணவர்கள் எதிர்நோக்கக் கூடும். இதனால் ஒருவர் மன அழுத்தத்திற்கு ஆளாதல், குடும்ப முறிவு, குற்றச் செயல்களில் ஈடுபடுதல், தவறான பாதைகளுக்குச் செல்லுதல் போன்றவற்றிற்கு ஆளாக நேரிடலாம். ஆகையால்தான் கல்வியில் அக்கரையின்மை என்பது உலகளாவிய நிலையில் சமூகவியலாளர்களால் மிகப்பெரிய சமுதாயச் சிக்கலாகப் பார்க்கப்படுகின்றது (Mahesar, Pathan & Qadeer, 2020).

விமலா பெருமாளின் *விளையாட்டுப் பசங்க*, மற்றும் *வெட்டிப் பசங்க* ஆகிய திரைப்படங்களில் காட்டப்படும் முதன்மைக் கதாப்பாத்திரங்கள் கல்வியில் அக்கரைச் செலுத்தாதக் கதாப்பாத்திரங்களாகவே படைக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் வாழ்க்கையில் நிகழும் பிற சிக்கலுக்கு இச்சிக்கலே அடிப்படைக் காரணமாக அமைவதைப் பார்க்க முடிகின்றது. *விளையாட்டுப் பசங்கத்* திரைப்படத்தில் குமார் 3 ஆண்டுகளாகக் கல்லூரித் தேர்வில் தொடர்ந்து தோல்வியுறுகிறான். வறுமையானக் குடும்பப் பின்னணியைச் சார்ந்தக் குமார் நன்கு கல்வி கற்று தன் குடும்பத்தின் சூழலை மாற்ற முயற்சிக்காமல் தனது கல்விப் பருவத்தைத் தன் நண்பர்களோடு வீணடிக்கிறான்.

இத்திரைப்படத்தின் ஒரு காட்சியில் பென்ஜோ என்பவன் தன் நண்பனிடம் 'கல்லூரி தனிநபர் இடுபணியை முடித்து விட்டாயா' என வினவும் போதுதான் இடுபணி குறித்த ஞாபகமே குமாருக்கு வருகிறது. மேலும், குமாரின் தந்தை கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராய் குமாருக்கு பல முறை அறிவுரைக் கூறியும் கல்வி மீது அவனுக்கு அக்கரை இல்லாமையை இத்திரைப்படம் முழுக்கப் பார்க்க முடிகின்றது. கல்வியில் அக்கரைச் செலுத்தாத சூழலினாலே அவனால் கல்லூரியில் தேர்ச்சி பெற முடியவில்லை. அதன் விளைவாக வேலையின்மைச் சிக்கலை எதிர்நோக்குகிறான் குமார் அதோடு தகுந்த வேலை கிடைக்காதக் காரணத்தினால் பணத் தேவைக்காகத் திருட்டுக் குறுந்தட்டு விற்பனையாளனிடம் வேலைக்குச் சேருவதாகவும் காட்டப்படுகிறது.

சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு பேராக் மாநிலத்தின் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே பள்ளியில் இருந்து இடைநிற்றலுக்கான முதன்மை காரணமாக கல்வியில் அக்கரையின்மை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வழி பெர்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வியில் நாட்டம் இல்லை எனவும் மாறாக பணம் ஈட்டுவதிலே அதிகம் நாட்டம் இருந்ததாக தெரிவித்திருந்த கருத்து இவ்விடம் உற்று நோக்கத்தக்கது (Siti, Kung Teck

Wong & Haniz, 2016). இக்கூற்று மேற்கண்டத் திரைப்படத்தில் முன்வைக்கப்பட்டுள்ளக் கருத்துடன் இணைந்துப் போவதைக் காண முடிகின்றது.

மேலும், யுனைட்டட் ஸ்டேட்ஸ் சன் டியகோ பல்கலைகழக (San Diego States University) உளவியல் கல்லூரி மாணவர்களிடையே கல்வி மற்றும் பணம் ஈட்டுதல் பற்றியப் புரிதலையும் நாட்டத்தையும் பற்றி ஓர் ஆய்வை நடத்தியிருந்தனர். இந்த ஆய்வின் முடிவுகளாக இன்றையப் பெரும்னபான்மையானக் கல்லூரி மாணவர்கள் கல்வியைவிட பணத்தின் ஈட்டுவதில் அதிகம் நாட்டம் உடையவர்களாக இருக்கின்றன என கண்டறியப்பட்டுள்ளது. இன்றைய உலகில் வாழ்வதற்கு பணம் மட்டும்தான் தேவை எனும் புரிதலோடு பல மாணவர்கள் வாழ்கின்றனர். இதுவே இவர்களுக்குக் கல்வியின் மீது நாட்டமின்மைக்கும் அக்கரையின்மைக்கும் காரணியாக அமைவதை இவ்வாய்வின் வழி பார்க்க முடிகின்றது. (Yoni Blumberg, 2017, https://www.cnbc.com/2017/11/03/college-students-today-value-education-less-and-money-more-study.html.

இத்தகையச் சிக்கல் விமலா பெருமாளின் *வெட்டிப் பசங்கத்* திரைப்படத்தில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. கதையின் கதாநாயகன் டெனீஸ் கல்வி இல்லாமலே வாழ்க்கையில் பணம் சம்பாதிக்க விரும்பும் கதாப்பாத்திரமாக அமைகிறான். டிப்லோமாவை கூட முடிக்காமல் போலி இளங்களைச் சான்றிதழ் மூலம் வேலை தேட முயற்சிக்கிறான். ஆனால் தகுந்தக் கல்வித் தகுதி இல்லாத காரணத்தினால் வேலையின்மைச் சிக்கலை எதிர்நோக்கித் தீய வழிகளில் பணம் ஈட்ட முயற்சிக்கிறான். இது அவனை மட்டும் பாதிக்காமல் அவனைச் சார்ந்திருக்கும் குடும்பத்தையும் பாதிக்கின்றது. இவ்விடத்தில் வாழ்க்கையில் இத்தகையச் சிக்கலை எதிர்நோக்குவதற்கு கல்வியில் அக்கரையின்மையே காரணம் என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்ச் சமுதாயம் ஆதியிலிருந்துக் கல்விக்கு முக்கியதுவம் அளித்தச் சமுதாயம். வாழ்க்கையில் கல்வியை விட சிறந்தச் செல்வம் எதுவும் இருக்க முடியாது என்பதில் உறுதியுடையது தமிழ்ச் சமுதாயம் (Seiva & Selvamani, 2021). வாழ்க்கையில் ஒருவரை உயரத்திற்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் உடைய கல்விச் செல்வத்தைப் பிச்சை எடுக்கும் நிலை வந்தாலும் அரும்பாடுப்பட்டாவது கற்றுவிட வேண்டும் என்கின்றனர் நம் முன்னோர். விவேக சிந்தாமணி:-

“வெள்ளத்தால் போகாது
வெந்தணலால் வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது

கொடுத்தாலும் நிறைவொழிய குறைபடாது
கள்ளர்க்கோ மிக அரிது
காவலோ மிக எளிது
கல்வி என்னும் உள்ளத்தே
பொருளிருக்க உலகெலாம்
பொருள்தேடி உமல்வதேனோ" (*விவேக சிந்தாமணி* 65)

என்றுரைக்கிறது. பொருட் செல்வம் என்பது பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும் ஆற்றல் உடையது. ஆனால் கல்வி எனும் செல்வத்தை ஒருமுறைப் பெற்றுவிட்டால் எத்தகையச் சூழலிலும் நம்மைவிட்டுச் செல்லாது. வெள்ளத்தாளும் அழியாது, நெருப்பினாலும் வேகாது, பிறருக்குக் கொடுத்தாலும் குறையாது, திருடர்களால் களவாடவும் முடியாது எனப்படுகின்றது. ஆகையால்தான் கல்வி கற்றவருக்கு ச்சென்ற இடமெல்லாம் சிறப்பு எனப்படுகின்றது.

இத்தகைய அழிவில்லாச் செல்வத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வு இன்றைய தலைமுறையினரிடம் குறைந்துக் காணப்பட்டுவருகின்றது. கல்வியில் அக்கரையின்மை அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனைதான் விமலா பெருமாள் தன் திரைப்படங்களின் வாயிலா இதனை முன்வைத்துள்ளார். இப்படத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் இச்சிக்கல் நம்பகத்தன்மையோடுதான் பேசப்பட்டிருக்கின்றது என்பதனைப் பகுப்பாய்வின் வழி அறிய முடிகின்றது. கல்வியின்பால் அக்கரைச் செலுத்தாமல் இருக்கும் இளைஞர்களிடையே வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவத்தைக் கண்டிப்பாக இத்திரைப்படங்கள் எடுத்துரைக்கும்.

**மலேசியத் தமிழ்த் திரைப்படங்களில் பள்ளியில் இருந்து இடைநிற்றல் திரைக்காட்சிகள்**

*விளையாட்டுப் பசங்க* திரைப்படத்தில் குமாரின் தந்தை பள்ளி இடைநிற்றல் சிக்கலை எதிர்நோக்கி இருப்பதைப் பார்க்க முடிகின்றது. ஒரு காட்சியில் கல்வியில் அக்கரைச் செலுத்தாமல் பொழுதை வீணடிக்கும் குமாரும் அவன் நண்பன் பெஞ்ஜோவும் வெளியேச் செல்லும் பொழுது குமாரின் அப்பா "எனக்குத்தான் பள்ளிப் படிப்பை முடிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை, அதனால் வறுமையில் வாடுகிறேன். உங்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கு அதனை தவற விடாதீர்கள்" எனக் கூறும் காட்சியின் வழி அவர் பள்ளி இடைநிற்றல் சிக்கலை எதிர்நோக்கி இருப்பதைப் பார்க்க முடிகின்றது.

*வெடிகுண்டுப் பசங்க* திரைப்படத்தில் 15 வயது சிறுவன் பள்ளியில் இருந்து இடைநிற்றல் சிக்கலை எதிர்நோக்குவதைப் பார்க்க முடிகின்றது. ஒரு காட்சியில்

வழிப்பறிக் குற்றத்தில் ஈடுபட்டதால் 15 வயது சிறுவனுக்கு தண்டனை வழங்கப்படுகின்றது. அவனின் தாய் காவலதிகாரியிடம் தன் மகனை விடுமாறு மன்றாடுகிறார். வீட்டுச் செலவுகள் அனைத்தையும் 15 வயது மகனான அவன்தான் கவனித்துக் கொள்கிறான் என்கிறார். அதற்குக் காவல்துறை அதிகாரிகள் "படிக்கும் வயதில் பிள்ளையை பள்ளிக்கு அனுப்பாமல் பணம் பணம் என்று தொந்தரவுக் கொடுத்தால் குற்றத்தில் ஈடுபடாமல் வேறு என்ன செய்வான்" என்கிறார்.

**பள்ளியில் இருந்து இடைநிற்றல் - பகுப்பாய்வு**

பள்ளியில் இருந்து இடைநிற்றல் என்பது மலேசிய இந்தியர்களிடையே நிலவும் சமகாலச் சிக்கலாகக் காண முடிகின்றது. மலேசிய இந்தியர் பெருந்திட்டச் சுருக்கம் 2018-இல் (*Malaysian Indian Blueprint 2018*) மலேசிய இந்தியர்கள் கல்வியியல் ரீதியாக எதிர்நோக்க்கும் பிரச்சனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் 20 முதல் 24 வயதுடைய இந்திய மாணவர்கள் 9% கீழ்நிலை இடைநிலைப் பள்ளி அளவில்தான் கல்வி அடைவினை எட்டியுள்ளனர் எனக் காட்டுகின்றது. இந்திய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 13 % விழுகாட்டினர் அதாவது ஏறத்தாள 1000 இந்திய மாணவர்கள் தொடக்கப்பள்ளியிலே பள்ளிப் படிப்பிலிருந்து பாதியில் நிறுத்தியுள்ளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மறுபுறம் இடைநிலைப் பள்ளிகளில் 8% அதாவது 4300 மாணவர்கள் பள்ளியிலிருந்து இடைநின்றுள்ளனர்.

மேலும் 2015-ஆம் ஆண்டில் 54% இந்திய மாணவர்கள் மட்டுமே யூ.பி.எஸ்.ஆர் தேர்வில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். பொதுப் பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் எண்ணிக்கை என்று பார்க்கும் பொழுது 74% பூமிபுத்ராக்களும், 13% சீனர்களும் பயிலும் வேளையில் 4.5% இந்திய மாணவர்கள் எனும் தகவலையும் அந்த அறிக்கையின் வாயிலாக அறிய முடிகின்றது (Malaysia Indian Blueprint, 2018) Retrieved May 28 2022, 10:00 am from http://dbook.penerangan.gov.my/dbook/dmdocuments/malaysian_indian_blueprint_tamil/mobile/index.html#p=8. இதன் வாயிலாக ஒரு வருடத்தில் சுமார் 10% இந்திய மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்கள் வரை தங்களின் கல்வியைத் தொடர்ந்துள்ளனர் என்பதனைப் பார்க்க முடிகின்றது. மீதம் 90% இந்திய மாணவர்கள் வெவ்வேறு நிலைகளில் தங்கள் பள்ளி படிப்பிலிருந்து நின்று விடுகின்றனர்.

இதுவல்லாது 2020-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி இடைநிலைப் பள்ளியில் மட்டும் வருடத்திற்குச் சுமார் 10,000 இந்திய மாணவர்கள் எஸ்.பி.எம் தேர்வுக்கு முன்னதாகவே பள்ளியிலிருந்து இடைநிற்றல் செய்துள்ளனர் (மலேசிய கல்வி அமைச்சு அறிக்கை, 2020). இச்சூழலின் அடிப்படையில் காணும் போது விமலா பெருமாளின் திரைப்படங்களின் முன்வைக்கப்பட்டிருக்கும் பள்ளியில் இருந்து இடைநிற்றல் எனும் காட்சிகளானது மலேசிய நாட்டில் நிலவும் உண்மை நிலவரத்தையே காட்டியுள்ளது என்பதாகக் கூறலாம்.

*விளையாட்டுப் பசங்க* திரைப்படத்தில் குமாரின் தந்தை தனது பள்ளிப் பருவத்தில் பள்ளியில் இருந்து இடைநிறுத்தம் செய்திருந்த போதும் அவர் எந்தப் பருவத்தில் இச்சிக்கலை எதிர்நோக்கியுள்ளார் என்பதனை அறிய முடியவில்லை. ஆனால் எஸ்.பி.எம் சான்றிதழ் பெருவதற்கு முன்னதாகவே அவர் பள்ளியிலிருந்து இடை நின்றிருக்கக் கூடும் என்பதனை அவர் செய்யும் தொழிலை (சாலைகளில் துப்புறவு பணி) வைத்து ஊகிக்க முடிகின்றது.

அடுத்து *வெடிகுண்டுப் பசங்கத்* திரைப்படத்தில் பேசப்பட்டிருக்கும் இச்சிக்கலானது 15 வயதுடைய இளைஞன் பள்ளியில் இருந்து இடைநின்றிருக்கிறான் என்பது தெளிவாகத் திரைப்படத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் இந்த இரண்டு திரைப்படங்களுமே மலேசியாவின் குறைந்தப்பட்ச கல்விச் சான்றிதழ் பெருவதற்கு முன்னமே மாணவர்கள் பள்ளியிலிருந்து இடைநிறுத்தம் செய்திருப்பதைப் பார்க்க முடிகின்றது. அவ்வகையில் உண்மை நிலவரத்தையே இத்திரைப்படம் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

இத்திரைப்படங்களிரண்டும் பள்ளியில் இருந்து மாணவர்கள் இடைநிறுத்தம் செய்ததற்கு வறுமையும் குடும்பச் சூழலும் முதன்மைக் காரணங்களாகக் காட்டியுள்ளன. மேலைநாட்டு அறிஞராகிய மேக்ஸ் வெபர் (Max Webar) ஒரு குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலை அக்குழந்தைகள் வளரும் விதம், கல்வி, எதிர்காலத்தை பாதிக்கும் என்கின்றனர். அதோடு உயர் சமூகப் பொருளாதாரத்திலிருந்து வரும் குழந்தைகள் வாழ்க்கையில் வெற்றிப்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் எனப்படுகின்றது. ஏனெனில் முன்முயற்சி, வலுவான உந்துதல் மற்றும் வெற்றிக்கான வாய்ப்புகள் அச்சூழலில் அதிகமாக உள்ளது. மறுபுறம் குறைந்த சமூக அந்தஸ்து கொண்ட குடும்பங்கள் வறுமை, அடிப்படை தேவை இன்மையிலே சிக்கி தவிப்பதால் போராட்டமிக்க வாழ்க்கை எதிர்நோக்குகின்றனர். அவ்வகையில் அடிப்படை

தேவைகளையே பூர்த்திச் செய்து கொள்வதில் சிரமம் என்பதால் இச்சூழலில் கல்வியில் கவனம் செலுத்தும் ஊக்கமானது குறைவாக உள்ளது (Jakiya Jamalludin, 2011).

இப்பார்வையின் அடிப்படையில், *வெடிகுண்டுப் பசங்கத்* திரைப்படத்தில் 15 வயது இளைஞன் வழிப்பறிக் குற்றத்திற்கு ஆளானதற்கு வறுமை காரணாமகக் கட்டப்பட்டுள்ளது பொருந்திப் போகிறது. 15 வயதில் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டுக் குடும்பத் தேவைகளை அவன் ஒருவனே பூர்த்தி செய்வதை அவன் தாயின் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது. இவ்விடத்தில் அவன் பள்ளி இடைநிற்றல் சிக்கலை எதிர்நோக்கியதற்கு அவன் குடும்பச் சூழலும் வறுமையுமே காரணம் என்பதனை தெள்ளத் தெளிவாகப் பார்க்க முடிகின்றது.

இதுவல்லாது *விளையாட்டுப் பசங்கத்* திரைப்படத்தில் குமாரின் தந்தை குடும்ப வறுமையின் காரணத்தால் பள்ளிப் படிப்பை முடிக்கத் தனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை நீங்களாவது படித்து முன்னேருங்கள் என்று கூறுவதாக அமைந்த காட்சியானது குடும்பத்தின் வறுமை காரணமாகவே பள்ளியில் இருந்து இடைநிற்றல் நடந்துள்ளதை நன்கு சித்தரிக்கின்றது. இது மலேசிய மக்களிடையே நிலவுவதை அப்படியே படம்பிடித்துக் காட்டியுள்ளதாகவே எண்ணத் தோன்றுகிறது. 2020 மலேசிய ஜனத்தொகையில் மலேசிய இந்தியர்களின் எண்னிக்கை 2, 223, 600 ஆகும். இந்த எண்ணிக்கையில் 2.01 மில்லியன் இந்தியர்கள் பி40 குழுமத்தைச் சார்ந்தவர்கள் (Department of Statistic Malaysia, 2020) Retrieved May 25 9.30 pm from https://www.dosm.gov.my/v1/index.php?r=column/cthemeByCat&cat=493&bul_id=VTNHRkdiZkFzenBNd1Y1dmg2UUlrZz09&menu_id=amVoWU54UTl0a21NWmdhMjFMMWcyZz09.

மேலும் மலேசிய இந்தியப் பெருந்திட்டச் சுருக்கத்தின் (2018) கூற்றின்படி 0.6% அல்லது ஏறக்குறைய 3500 மலேசிய இந்தியர்கள் வறுமை கோட்டு கீழ் உள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது (Malaysia Indian Blueprint, 2018) Retrieved May 28 2022, 10:00 am from http://dbook.penerangan.gov.my/dbook/dmdocuments/malaysian_indian_blueprint_tamil/mobile/index.html#p=8.

அவ்வகையில் 99% சதவீத இடைநிற்றல் மாணவர்கள் B40 நடுத்தர பொருளதார குழுமத்தைச் சார்ந்தவர்கள் எனப்படும் கூற்றோடு இந்தியர்களின் பொருளாதாரச் சூழலை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மலேசிய இந்தியர்களின் வறுமை நிலைக்கும் மலேசிய இந்திய மாணவர்களிடையே நிலவும் பள்ளி இடைநிற்றல் சிக்கலுக்கும்

நெருங்கிய தொடர்புண்டு என்பதனைப் பார்க்க முடிகின்றது (Malaysiakini, 2021) Retrieved 5 May 10.00 am from https://www.malaysiakini.com/announcement/587933.

பள்ளியில் இருந்து இடை நிறுத்தம் செய்யும் மாணவர்கள் அதோடு நின்றுவிடாமல் குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இது வெடிகுண்டுப் பசங்கத் திரைப்படத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. பள்ளியில் இருந்து இடைநிற்கும் மாணவர்கள் முதற்கண் வேலையில்லாச் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். இதனால் பணச்சிக்கலுக்கு ஆளாகும் இவர்கள் தங்கள் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்திச் செய்துக் கொள்ளக் குற்றச்செயல்களில் ஈடுபடும் சூழலுக்கு தள்ளப்படுகின்றனர்.

*வெடிகுண்டுப் பசங்கத்* திரைப்படத்தில் இச்சூழல்தான் காட்டப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தில் பள்ளியில் இருந்து இடைநிற்கும் கதாபாத்திரம் குடும்பத் தேவைகளைப் பூர்த்திச் செய்துக் கொள்ள வழிப்பறிக் குற்றத்தில் ஈடுபடுவதைப் பார்க்க முடிகின்றது. மேலும், அக்காட்சியில் காவல் துறை அதிகாரி ஒருவர் "படிக்கும் வயதில் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் பணம் பணம் நெருக்கடி தந்தால் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் வேறு என்ன செய்வார்கள்" என்று கூறுவது இச்சிக்கலை உறுதிபடுத்துவதாக அமைவதைப் பார்க்க முடிகின்றது. இதன் வழி *வெடிகுண்டுப்பசங்க* திரைப்படத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் சிந்தனையானது நம்பகத்தனமை வாய்ந்தது என முடிவுரைக்கலாம்.

**முடிவுரை**

விமலா பெருமாளின் *விளையாட்டுப் பசங்க மற்றும் வெடிகுண்டுப் பசங்க* ஆகிய இரண்டு திரைப்படங்களுமே கல்வி குறித்த சிந்தனைகளை மிக நேர்த்தியான முறையில் முன்வைத்துள்ளன. அடிப்படையில் இவ்விரு திரைப்படங்களும் இளையோரின் வாழ்க்கையில் சித்தரிக்கப்படும் பல்வேறு சிக்கல்களைப் பற்றிப் பேசினாலும் அவை அனைத்தும் கல்லாமை மற்றும் மாணவர்கள் பள்ளிப் படிப்பை நிறைவு செய்யாமை அல்லது பள்ளியில் இருந்து இடைநிற்றல் ஆகிய இரண்டு காரணங்களால் ஏற்பட்டது என்பதாகத்தான் தெரிகிறது. மேலும், பள்ளி இடைநிற்றல் என்பது மலேசிய இந்தியர்களிடையே நிலவும் முக்கியதொரு சமகாலச் சமுதாயச் சிக்கல் என்பதனையும் மிகத் தெளிவாகவக இத்திரைப்படங்கள் சித்தரித்துள்ளன. விமலா பெருமாளின் திரைப்படங்களில் இச்சிக்கல் நம்பகத்தன்மையோடும் நிறைவோடும் பேசப்பட்டுள்ளது என்பதனையும் இவ்வாய்வின் வழி அறிய முடிகின்றது.

**References**


Bordwell, David & Thompson, Kristin. (2008). Film Art. New York: MC Graw Hill.

L.LEE.S. ((2016). *Ulaga Cinema Varalaru*. Chennai: Bharathi Buthakalayam.

Richard, Howells & Robert, Matson. (2009). *Using Visual Evidence*. UK: McGraw-Hill Education.

Sillllalee, S. K. (2015). *Filem-filem Tamil di Malaysia: Suatu pemerhatian terhadap ketaksamaan sosial.* (Phd). University Malaya, Kuala Lumpur.

Siti, E., Kung,T., & Haniz Ibrahim. (2016). Trends and factors for dropout among secondary school students in Perak. *Journal of Research, Policy & Practice of Teachers & Teacher Education, Vol.6, N0 1*.

Suresh, P. (1999). *Media Ulagam – Thagaval Thodarpu sathanangkal – oor Vimarsana Arimugam*. Thebika.

*Thirukural*

*Vivega Sinthamani*

Weber, Max. (1968). Class, Status and Party. In Reinhard Bendix & Seymour Martin Lipset (Eds.), *Class, Status, And Power* (Pp. 21-28). London: Routledge & Kegan Paul Ltd.

Yoni Blumberg, 2017, https://www.cnbc.com/2017/11/03/college-students-today-value-education-less-and-money-more-study.html

Malaysia Indian Blueprint, 2018) Retrieved May 28 2022, 10:00 am from http://dbook.penerangan.gov.my/dbook/dmdocuments/malaysian_indian_blueprint_tamil/mobile/index.html#p=8.

Department of Statistic Malaysia, 2020 Retrieved May 25 9.30 pm from https://www.dosm.gov.my/v1/index.php?r=column/cthemeByCat&cat=493&bul_id=VTNHRkdiZkFzenBNd1Y1dmg2UUlrZz09&menu_id=amVoWU54UTl0a21NWmdhMjFMMWcyZz09.

(Department of Statistic Malaysia, 2020) Retrieved May 25 9.30 pm from https://www.dosm.gov.my/v1/index.php?r=column/cthemeByCat&cat=493&bul_id=VTNHRkdiZkFzenBNd1Y1dmg2UUlrZz09&menu_id=amVoWU54UTl0a21NWmdhMjFMMWcyZz09.



Malaysia Indian Blueprint, 2018) Retrieved May 28 2022, 10:00 am from http://dbook.penerangan.gov.my/dbook/dmdocuments/malaysian_indian_blueprint_tamil/mobile/index.html#p=8.



Malaysiakini, 2021 Retrieved 5 May 10.00 am from https://www.malaysiakini.com/announcement/587933